பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



**Pandian Tamil Journal of Temple Studies**

*A Peer-Reviewed Journal*

**Volume 1, Special Issue 1, January 2022** **E-ISSN: 2583-0880**

# Ayya Vaikundar's Divine Charisma and Ressurection of the Untouchables

**Dr P. Muthuraj,** Assistant Professor, Tamil Department,
Govt. Arts & Science College, Perambalur - 621116, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3129-1440**

**DOI: 10.5281/zenodo.6433492**

## Abstract

*The write up I have produced reflects the happenings during the time of Ayya Vaigundar, who was at that time called "Muthukutty". It explains the series of events, which happened to improve the living standards of the low caste people against many obstacles and Ayya"Vaigundar" who was himself stamped as belonging to the low caste, faced innumerable difficulties in raising the people who were isolated from society as untouchables. They were not supposed to have footwear, clothes above the hip, given no wages for their handwork, were not allowed to mingle with high caste people, not allowed to enter temples and not allowed to draw water from common wells. These are the few examples that show the extent of the atrocities against them. Ayya Vaikundar, who was one among them, obtained enlightenment from Lord Vishnu and was reincarnated as the son of Maha Vishnu/Lakshmi Devi. He helps the low caste people in many ways. Unable to bear with this, the Tranvancore King orders to arrest him and puts him into several physical sufferings. He even went to the extent of putting Vaikundar in a cage with a ferocious tiger. Surprisingly, the tiger worships him instead of attacking. This incident makes the people understand that he is no ordinary human but a Saint. Later, he establishes a few principles that revamped the lives of low caste people. To conclude, there are still people who are being ill-treated in the name of caste. All their suffering can be put to an end only if people like Sri "Vaikundar" take efforts that will revamp their lives into a peaceful one.*

**Keywords:** Neglected Santrors, Sanar, Made to work, High Clans, Public space, Confront, acquisition, Distinction.

## References

[1] Ra. Arigopalan Seedar. *Akilathiratu Ammanai*. Thenthamaraikulam, 1939.

[2] Pa. Sangumannan. *Arul Nool*. Samithoopu, Kumari Mavattam - 629704.

[3] Na. Palvanna Perumal. *Bhagawan Vaigundar Avatharam*. Nanjil Offset Printer, Nagercoil, 2012.

[4] Thi. Balasundaram. *Akilathirattu Urainadai*. Samithoopu, 2013.

[5] Maruthi Priyan. *Ayya Vaikundar Aruliya Aanmiga Maargam*. Hema Publication, Eathamozhi, Kanniyakumari District, 2013.

[6] S.V. Rajadurai. *Thalithiyamum Ulaga Muthaliyamum*. Vidiyal Pathipagam, Coimbatore, 2015.

**Author Contribution Statement:** NIL

**Author Acknowledgement:** Nil

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

# அய்யா வைகுண்டரின் ஆன்மீக ஆளுமையும் ஒடுக்கப்பட்ட சான்றோர்களின் மீட்சியும்

**முனைவர் பெ.முத்துராஜ்,** உதவிப்பேராசிரியர் , தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரம்பலூர் - 621116, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-3129-1440
DOI: 10.5281/zenodo.6433492

**ஆய்வுச்சுருக்கம்**

*அகிலத்திரட்டு அம்மனை என்ற நூலை பாமர மக்களுக்கும் புரியும் வகையில் தனது தாய்மொழியான தமிழில் எழுதினார். அறியாமை இருளில் இருந்து உருவ வழிபாட்டை அகற்றி, இறைவன் உருவமற்றவன் என்பதை மக்களுக்கு உணர்த்தினார். இறைவனுக்குப் பிற உயிர்களைப் பலியிடுவது தவறு என்று வலியுறுத்தினார். சாதிய ஒடுக்குமுறையும் ஆண்-பெண் அடிமையும் இருந்த காலத்தில் தனி மனிதனாக ஆண்-பெண் அடிமை இல்லை என்பதை அய்யா சமுதாயத்திற்கு வெளிப்படுத்தினார். நம்பூதிரிகளும், நாயர்களும், பிராமணர்களும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்குப் பெரும் கொடுமைகளை இழைத்தனர். உயர்சாதியினர் பயன்படுத்தும் கிணறுகளை அடிமைகள் என்று அழைக்கப்படுபவர்கள் பயன்படுத்த அனுமதிக்கவில்லை. இந்த கொடுமைகளைத் தடுக்க அய்யா வைகுண்டர் சாமிதோப்பில் முத்திரிக்கிணறு என்ற சமதர்ம கிணற்றைக் கட்டினார். உணவின்றி பட்டினி கிடந்த மக்களுக்கு அன்னதானம் வழங்கினார். உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்று ஏற்றத் தாழ்வுகளோடு வாழ்ந்ததைக் கண்டு அய்யா ஒரு இனம் என்று அன்பின் குடையின் கீழ் வாழ வழி செய்தார். அய்யா வைகுண்டரின் சமூகப் பணிகள் பல ஆண்டுகளாக மக்களால் போற்றப்பட்டு வருகின்றன. அய்யா வைகுண்டரின் சீர்திருத்தக் கருத்துகளை இந்த ஆய்வில் விரிவாகக் காணலாம்.*

**கருச்சொற்கள்:** ஒடுக்கப்பட்ட சான்றோர், சாணார், பணிக்கப்படுதல், மேட்டுமை குடி, பொதுவெளி, மறுதலித்தல், கற்பிதம், விழுமியம்.

## முன்னுரை

உயர்தனிச் செம்மொழியாகத் திகழும் தமிழ் மொழியைப் பக்தியின் மொழி என்பர். இப்பக்திமொழி சிந்தனையைச் சைவம், வைணவம் எனப் பிரிப்பர். இச்சமயங்கள் முறையே சிவனையும் திருமாலையும் முழுமுதற்கடவுளாகக் கொண்டு இயங்குகிறது. கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின் ஆலயப்பணியே ஆண்டவன் பணி என்ற சிந்தனையும், கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்னும் பழமொழியும் மக்களிடம் தோன்றிற்று. பண்டைய

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

வழிபாட்டு மரபுகள் நிலம் சார்ந்த மரபாகவே காணப்பட்டது. இலக்கியங்களில் சமயம் சார்ந்த சிந்தனைகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ எழுந்தன. சமயம் என்பது மக்களின் உள்ளும் புறமும் இருந்து உணர்வு, அறிவு, சிந்தனை, ஒழுக்கம், பண்பாடு இவற்றை வளர்த்துத் தம்மைப் பண்படுத்துவதாக எண்ணினர். அதனால்தான் கடவுள் அனைத்திலும் இல்லை. ஆனால் அனைத்துமே கடவுளாக இருக்கிறார் என்று நம்பினர். எல்லாத் தொழில்களையும் செய்ய வல்லவனாய் காணப்படுபவனே முழுமுதற்கடவுள். அவ்வாறில்லாமல் ஒவ்வொரு தொழிலை மட்டும் செய்ய வல்லவர் முதற்கடவுள். அருள் வழி நிற்கும் தொழில் கடவுளர் ஆவார். அந்த வகையில் அருள்வழி நிற்கும் ஒவ்வொரு அடியவர்களுக்கும் ஒவ்வொரு பணிகள் பணிக்கப்பட்டிருக்கும். கோவில் கட்டுதல், குளம் வெட்டுதல், அணைக் கட்டுதல் இறைப்புகழ் பரப்புதல், சாதி சமய சமதர்மப் புரட்சி செய்தல் என்னும் அடிப்படையில் கட்டமைக்கப்படுகிறது. ஆழ்வார்கள், நாயன்மார்கள், வள்ளலார், தாயுமான சுவாமிகள் போன்ற சைவ வைணவ அடியார்கள் பக்தியைப் பரப்பினர். இவ்வாறு இவர்கள் பக்தி இலக்கியங்களைப் பரப்ப தவறிருந்தால் இந்நேரம் நம்நாடு மதம் மாற்றிக் கொண்டிருக்கும் ஒரு சில சமயவாதிகளால் பீடிக்கப்பட்டிருக்கும் என்பது நிதர்சன உண்மை.

சைவ, வைணவ அடியார்கள் பிறப்பு இறப்பு அற்றவர்கள் அல்ல. அன்றாட மானிட வாழ்க்கையை வாழ்ந்து அனுபவம் பெற்றவர்கள். மக்களை மதிக்கத் தெரிந்தவர்கள். அவர்களோடு சாமான்யர்களாகத் தங்களைப் பிணைத்துக் கொண்டவர்கள். இன்பம், துன்பம், சுகம், துக்கங்களில் பங்கு கொண்டவர்கள். இவர்களுடைய வாழ்வில் நிகழ்ந்த இயற்கை நிகழ்ச்சி, அற்புதங்கள், இவர்கள் நிகழ்த்திய அதிசயங்கள் சிற்றறிவுக்கும் சிற்றனுபவங்களுக்கும் எட்டாததாகும். மேலும், புராண இதிகாசங்களில் வரும் கதைகள் அறிவுக்கும் அறிவியலுக்கும் பொருத்தமானதாகவோ, உலகத்திற்கு ஒத்த உண்மை உடையதாகவோ இல்லை என சொல்வோர் பலருண்டு. இருந்த போதிலும் ஆண்டவன் இருப்பிலோ அல்லது அவன் வழங்கும் அருளிலோ ஐயப்படக் கூடா என்னும் நம்பிக்கையே மக்கள் மனதில் ஆழ வேரூன்றியுள்ளது.

அதிகாரச் சமூக மேட்டுமைக் குடி அமைப்பு கீழமை மக்களை விளிம்பு நிலைக்கு தள்ளுகிறது. சமூக பொதுவெளியில் அடித்தட்டு மக்களைத் தொட்டால் தீட்டு, கண்டால் தீட்டு என்னும் கற்பித்தலால் மறுதலிக்கும்போது சொல்லொன்னாத் துயரங்களுக்கு ஆட்படுகின்றனர். இச்சூழலில் அதர்மத்தையும், அநீதியையும், அநியாயத்தையும் வேரறுத்து அதிகாரச் சமூக கட்டமைப்பைக் கட்டுடைப்பதற்காகவும், ஒடுக்கப்பட்ட சான்றோர்களாகிய நாடார் சாணர் மக்களின் வாழ்வியல் விழுமியங்களை மேம்படுத்துவதற்காகவும் சாணர் குலத்தில் முத்துக்குட்டி என்ற அய்யா வைகுண்டர் பிறந்துள்ளார். மானுட சமூகத்தை ஒன்றிணைக்கவும், ஒடுக்கப்பட்டவர்களுக்கான நீதியை நிலைநாட்டவும், அதர்மத்தை அழிக்க தர்மத்தைக் காக்கவும் அய்யா வைகுண்டர் எத்தனித்தார். திருவிதாங்கூர் மன்னன்

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

தீண்டத்தகாதச் சாதி என்று ஒடுக்கப்பட்ட நாடார் சாணர் குல சான்றோர்களை அடிமைப்படுத்தி, வேலைக்குக் கூலியின்றி, கணக்கற்ற வரிகளைச் சுமத்தி எண்ணற்ற கொடுமைகள் செய்தான். இக்கொடுமைகளில் இருந்து மக்களைக் காப்பதற்காக மகாவிஷ்ணுவின் நியதிப்படி கலியனாகிய மன்னனையும், அவனைச் சார்ந்த கலிநீசர்களையும் அழிக்க அய்யா வைகுண்டர் அவதாரம் எடுத்துள்ளார். இவ்வவதாரத்தைப் பக்தி இலக்கியங்களில் முன்னெடுக்கப் படாமலேயே காணப்படுகின்றன. தென் மாவட்டங்களில் மட்டும் தான் அய்யாவழி ஆன்மீகப் போதனைகளும், அருள் வழிபாடுகளும் காணப்படுகின்றன. இன்னும் அவர்களுக்குள்ளே முத்துக்குட்டி வேறு, அய்யா வைகுண்டர் வேறு என வேறுபடுத்திப் பார்க்கும் போக்குக் காணப்படுகிறது. இதற்கு மேட்டிமை சாதிய வகைப்பாடுகளாகவும் இருக்கலாம். இச்சாதிய முரண்பாட்டமைப்பிற்கும், பொருளாதார மேட்டுமைக் கொள்கைக்கும், சாதியக் கொடுமைகளில் இருந்து நாடார் மக்களை மீட்டெடுப்பதற்கு அரசியல் ரீதியாக காமராசர் பங்கு அளப்பறியது என்ற போதிலும், ஒடுக்கப்பட்ட மக்களை எல்லாம் ஆன்மீக ரீதியாகப் பொருளாதார சாதிய சமதர்மப் புரட்சி ஏற்படுத்தி, மீட்டெடுத்தப் பெருமை அய்யா வைகுண்டரைச் சாரும். அவருடைய ஆன்மீகப் போதனைகளையும் ஒடுக்கப்பட்ட மக்களின் மீட்சியையும் ஆராய்வது இக்கட்டுரையின் ஆய்வு நோக்கமாகும்.

**ஒடுக்கப்பட்ட சான்றோர்கள்**

சமுதாயம் என்பது வெவ்வேறு சமய சமூகப் பின்னணிகளையும், வெவ்வேறு அறிவு சார் நிலைகளையும், வெவ்வேறு சமதள மற்றும் சமூகப்பொருளாதார கட்டமைப்புக்களையும் கொண்டது. இதில் அதிகாரச் சமூகமும் அடிமைச் சமூகமும் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மைகளிலே விரவிக் காணப்பட்டது. இம்மேலாதிக்கப் போக்கை விமர்சனத்திற்கு உள்ளாக்குவதற்கும் கேள்வி கேட்பதற்கும் குறைந்த பட்ச தகுதிகளாக அரசியல், பொருளாதார ஆன்மிக வலிமைகளைக் கீழ்ச்சமூகம் பெற்றாக வேண்டும். கன்னியாகுமரி மற்றும் கேரளப் பகுதிகளான திருவனந்தபுரம், திருவான்கூர் போன்ற இடங்களில் சாதியக் கொடுமைகள் நிறைந்து காணப்பட்டது. உயர்சாதியினர் முன்னர் கீழ்ச்சாதியினர் செருப்பு அணியக் கூடாது என்றும், ஆண் பெண் என்னும் இருபாலரும் இடுப்பிற்கு மேலே ஆடை அணியக் கூடாது திறந்த மார்போடு நடமாட வேண்டும் எனவும், ஆலயங்களில் நுழையத் தடை விதித்தும் கடவுளர் பெயர்களைத் தம் குழந்தைகளுக்குச் சூட்டிக்கொள்ள மறுக்கப்பட்ட கொடுமையும், தலைப்பாகைக் கட்டிக்கொள்ள விடாமையும், பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்க அனுமதி மறுக்கப்பட்டமையும் மற்றும் உயர் சாதியினருடன் பேசும்போது பத்தடி தள்ளி நின்று பேச வேண்டும் என்ற கொடுமையும் நிகழ்ந்தேறியது.

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

**சான்றோர் மக்களைக் கூலி கொடுக்காமல் குளம் வெட்ட சொல்வான். ஆனால் அந்த குளத்தில் குளிக்கவும் விட மாட்டான். கோயில் கட்டச்சொல்வான். கும்பிடவும் விடமாட்டான். தானியங்கள் விளைவிக்க சொல்வான் அதை உண்ண விட மாட்டான். சான்றோர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களைக் கேட்டு அடிப்பான் தென்னை, பனைமரங்களில் இளநீர், நொங்கு எல்லாவற்றையும் கேட்பான் கொடுக்காவிட்டால் கைகுட்டைப் போட்டு அடிப்பான் (பகவான் வைகுண்டர் அவதாரம், ப.19)**

ஒடுக்கப்பட்டு விளிம்புநிலைக்கு தள்ளப்பட்ட கீழ்ச்சாதியினர் பட்ட இன்னல்கள் கொஞ்ச நஞ்சமில்லை. தாழக்கிடப்பாரைத் தற்காப்பதே என் கடனென விழித்தெழுந்தார் அய்யா வைகுண்டர். சாதி சமய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து தர்மத்தையும், நீதியையும் மற்றும் சத்தியத்தையும் நிலை நாட்டினார்.

**சாதி இந்துக்களின் கண்ணெதிரே அரை குறை ஆடைகள் கூட அணிந்து கொண்டு நடமாட முடியாதிருந்த தீண்டத்தகாத சாதியினர் வரலாற்றில் முதல் முறையாக நவீன இராணுவச் சீருடைகள் அணிந்து ஆங்கிலச் சிப்பாய்கள் தரித்த அதே ஆயுதங்களை ஏந்தி ஆங்கிலயத் தளபதிகளுக்கு அருகிலேயே நின்று அவர்களைத் தொட்டு அவர்கள் அருகிலேயே உணவருந்தி வாழ்கின்ற வாழ்க்கையை இராணுவம் வழங்கியது. (தலித்தியமும் உலகமுதலாளியமும், 2005, ப.21)**

பன்னூறு ஆண்டுகளாய் வரலாற்று வலிமைகளில் சாதி, சமய, சமூகப்பண்பாட்டுக் கூறுகளில் வேறுபாடுகள் நீக்கமற நிறைந்தே காணப்படுவதை அறியமுடிகிறது.

**அய்யா வைகுண்டரின் அவதாரம்**

சிவபெருமான் செய்த ஒரு பெரிய யாகத்தின் வழி ஒரு பொல்லாதவனைப் படைத்தார். அவனுக்குக் குரோணி என்று பெயர் சூட்டினார். மலைபோன்று மாமிசப் பிண்டமாகக் காணப்பட்டான். பல மாதங்கள் உறங்கி எழுந்து பயங்கரமான சப்தம் எழுப்பினான். பசிதாளாமல் பூவுலக மக்களைக் கொன்று விழுங்கினான். தண்ணீர் தாகத்தால் கடல் நீர் முழுவதையும் குடித்துக் காலி செய்தான். சிவன் இல்லாத வேளையில் கையிலையையே விழுங்கினான். பின் வைகுண்டத்தை நோக்கி ஓடினான். அதைக் கண்ட விஷ்ணு அங்கிருந்து தப்பி ஓடி சிவனிடம் அடைக்கலம் புகுந்தார். அவரிடம் நடந்தவற்றை விளக்கினார். இதைக் கேட்ட சிவன் குரோணியை வம்சத்தோடு அழிப்பதற்கு விஷ்ணுவிற்கு அறிவுருத்தினார். அதன் படி அக்குரோணியை ஆறு துண்டுகளாக வெட்டிப்போட்டு அந்தத் துண்டுகளில் இருந்து பிறக்கும் வம்சத்தினரைச் சதிரயுகம், நெடியயுகம், கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் என்னும் யுகங்கள் தோறும் பிறக்க வைத்து, அவ்வசுர குலம் அழிக்கப்படுகிறது. ஆறாவது யுகத்தில் கலியனை அழிக்கப் பிறப்பெடுக்க வேண்டியுள்ளது. முந்தைய யுகத்தில் துரியோதனாகப் பிறந்த குரோணி இவ்வுகத்தில் கலியனாகப் பிறப்பெடுக்கிறான். அக்கலியன்,

சிவபெருமான் வரத்தைப் பெற்று கொடுமைகள் பல செய்கிறான். அவனிடம் இருந்து பல இன்னல்களை அனுபவிக்கும் மக்களைக் காப்பதற்கும், அக்கலியுகத்தை அழித்துத் தர்மயுகத்தைத் தோற்றுவிப்பதற்கும் அய்யா வைகுண்டர் அவதாரம் எடுத்துள்ளார். அதாவது வியாச முனிவர் வகுத்த ஆதி ஆகமத்தின்படியே கொல்லம் ஆண்டு 1008 மாசிமாதம் 20ஆம் தேதி (1 மார்ச் 1833) இவ்வுலக மக்களின் மேன்மைக்காகவும், தாழக்கிடக்கும் சாதியினரை மீட்டெடுப்பதற்கும் ஆதிநாராயணருக்கும், திருமகள் மகாலெட்சுமிக்கும் மகனாக அவதரித்தார் அய்யா வைகுண்டர்.

**அலையிலே துயிலாதிவராகவோ**
**ஆயிரத் கெட்டாண்டினிலோர் பிள்ளை**
**சிலையிலே பொன்மகரவயிற்றினுள்**
**செல்லப்பெற்று திருச்சம்பதிதனில்**
**முலையிலே பொன்மகரப்பாலை உமிழ்ந்த பின்**
**உற்ற கெட்சணம் மீதிலிருந்து தான்**
**உலகினில் சோதனை பார்த்தவர் (அகிலத்திரட்டு ப.9)**

திருச்செந்தூர் கடலில் கலைமுனி, ஞான முனி என்னும் இரு சன்னியாசிகளின் துணையுடன் மகாவிஷ்ணுவைக் கண்டு அவருடைய அறிவுரையின் படியும் அவர் தந்த சிவலிங்கத்தைத் தன் கைக்குள் வைத்துக் கொண்டும் பூவண்டன் தோப்பில் ஆறு ஆண்டுகாலம் கடும் தவம் இருந்துள்ளார். தவம் இருந்த காலத்தில் மண், தண்ணீரினால் மக்கள் நோய் நொடிகளைத் தீர்த்து, பேய் பிசாசுகளை விரட்டி, மந்திர தந்திரங்களால் பாதிக்கப்பட்டவர்களைக் குணப்படுத்தி, சந்ததி இல்லாதபேருக்கு இறையருளால் சந்ததிகள் கொடுத்து சான்றோர் மக்களின் கண்கண்ட தெய்வமாக இருந்தார். (பகவான் வைகுண்டார் அவதாரம் ப.6)

**வைகுண்ட ராசர் வந்து ஈரேழு உலகம் எல்லாம்**
**ஒரு குடைக்குள் அரசு ஆள வருவதும் எங்கள் ஐயா**
**சிவசிவா சிவசிவா அரகரா அரகரா**
**கொந்தளப்ப ராசாவும் கோனானல்டி ராசனும்**
**கோட்டை எல்லாம் எங்கள் அய்யா அழித்து**
**வைகுண்ட ராசர் வந்து தர்மப்பதி உதித்து**
**தர்மயுகம் அரசாள வருவது எங்கள் அய்யா (அருள் நூல் உகப்படிப்பு ப.14)**

ஒடுக்கப்பட்டவர்களின் துயர் நீங்கி, சாதி, சமய, பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி, போட்டி, பொறாமை, வன்மம், சண்டையின்றி ஒரு இறைக்கீழ் மக்கள் அமைதியாக வாழ அய்யா வைகுண்டர் தர்மயுகத்தைத் தோற்றுவிப்பார் என்று மக்கள் நம்பினர்.

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

**அய்யா வைகுண்டரின் ஆன்மீகம்**

ஆன்மீகம் என்பது உண்மை, அன்பு, அறிவு, கலைக் கோட்பாடு என்னும் பெருமைகள் பொதிந்துக் காணப்படுவது. ஆனால் ஆன்மீகமும் ஆன்மீக வாழ்க்கையும் வெவ்வேறான கோடுகளில் பயணிக்கக் கூடியவை. ஆன்மீகம் என்பது ஒரு பொதுவான கோட்பாடு. ஆனால் ஆன்முக வாழ்க்கை என்பது இறைவனோடு இணைந்து வாழ்வதைக் குறிக்கும். எனவே, அன்பினால் மட்டுமே மக்களின் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக அடையாளப்படுத்த முடியும். துறவும் மேற்கொண்டு எல்லா வரமும் விஞ்சைகளும் பெற்று தெய்வமாகிய வைகுண்டருக்குச் சான்றோர் மக்கள் மீது இப்படி ஒரு பாசம் ஏற்பட்டுள்ளது. சான்றோர் மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும். அவர்கள் எல்லாச் செல்வமும் பெற்று மோட்சம் அடைய வேண்டும் என்பது தான் வைகுண்டரின் தணியாத ஆசை. பக்தி ஞானத்தில் தன்னிகரற்று விளங்கிய வைகுண்டரை மகாவிஷ்ணு மகனே என தன் பிள்ளையைப் போல் பல முறை அழைக்கிறார். (பகவான் வைகுண்டர் அவதாரம் ப.21)

மன்னன் வைகுண்டரை ஒழித்துக்கட்ட கைது செய்து சிறையில் அடைப்பதற்கு முன்பு பல தீய சோதகைளுக்கு ஆட்படுத்துகின்றான். சாராயத்தில் விஷத்தைக் கலந்து குடிக்கச் செய்வதும், சுண்ணாம்பு காளவாயில் வைத்து நீற்றுவதும், விறகுகளை அடிக்கி நெருப்பிட்டு அந்நெருப்பில் நடந்து வரச் செய்வதும், மிளகா வத்தல் எரித்த அறையில் போட்டு அடைத்து வைப்பதும் இச்சோதனைகளையெல்லாம் அய்யா வைகுண்டர் தவிடு பொடியாக்கி விட்டார். மேலும், மன்னன் இவரை விட்ட பாடில்லை. இறுதியாகக் காட்டுப் புலியைப் பிடித்து வந்து மூன்று நாள்கள் உணவிடாமல் பட்டினிப் போட்டு அம்பால் எய்யப்பட்டு கோபம் உண்டாக்கி அந்தப் புலிக்கூண்டில் தள்ளினான். ஆனால், அந்தப் புலியோ அய்யா வைகுண்டரை வணங்கி நின்றது.

**இன்று கடுவாய் இப்போது கொண்டு சென்று**
**கூட்டிலடைத்துக் கோபமதுவருத்த**
**ஈட்டிமையாயதற்கு இரையொன்றும் போடாமல் (அகிலத்திரட்டு ப.340)**

இச்சோதனைகளில் அய்யா வைகுண்டர் வெற்றி பெற்ற போதிலும் மன்னன் மனம் ஏற்றுக்கொள்ளாது 110 நாட்கள் சிறையிலடைத்துள்ளான். ஆனால், அய்யா வைகுண்டர் விரும்புவதெல்லாம் ஒடுக்கப்பட்ட சான்றோர் மக்களின் அமைதியான வாழ்க்கை. ஆரவாரம் இன்றி நடத்தப்படும் ஆன்மீக வழிபாட்டையும் சான்றோர் மக்கள் அடைய வேண்டும் என எண்ணினார்.

மன்னரால் வழங்கப்பட்ட 110 நாட்கள் சிறை தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டு 26 மார்ச் 1839 அய்யா வழி இயக்கத்தைத் தீவிரபடுத்திப் பண்டாரமாக அவதரித்தார். இவர் சிவனையும் மகாவிஷ்ணுவையும் சேர்த்தே "சிவ நாராயணம்" என்றே வணங்கினார். மகா

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

விஷ்ணு நாமத்தை அணிபவர், சிவபெருமான் திருநீற்றை அணிந்தவர், யோக நிஷ்டை வழிபாட்டின் முக்கியத்தெய்வம் சிவனும் மகாவிஷ்ணுவும் தான் அய்யா வைகுண்டரின் குலதெய்வமாக மகாவிஷ்ணு இருந்ததால் தனிச் சிறப்புடன் மகாவிஷ்ணுவை அய்யா வைகுண்டர் வணங்கியதால் மகாவிஷ்ணுவோடு ஒன்றிப் போய்விட்டார். எனவே மகாவிஷ்ணுவின் அவதராமானார். (சாட்டு நீட்டோலையில் வைகுண்டர் சான்றோர் மக்களுக்காக பட்ட பாடுகளும் வைகுண்டரின் தீர்க்க தரிசனங்களும் ஓர் விளக்கம் ப.43)

அய்யா வைகுண்டர் திருச்செந்தூர் கடல்கரையில் பண்டாராமாக மனுச்சொரூபம் எடுத்தார். கந்தல் காவி உடையும், கையில் மந்திரக் கோலும், கமுக்கூட்டிய பிரம்பும், நெற்றியில் வெள்ளை நாமமும், உச்சியில் கொண்டையும், உத்திராட்ச மாலையும், சுத்தி தலையில் தலைப்பாகையும் அணிந்து வைகுண்டர் என்ற பெயரில் சுவாமி தோப்பில் ஆறு ஆண்டு காலம் தவமிருந்தார்.

பண்டாரக் கோலம் பூண்ட அய்யா வைகுண்டர் 18 சாதி மக்களையும் ஒரே தளத்தில் வருவித்து நோய் தீர்த்தும், செல்வம் வேண்டுவோர்க்குச் செல்வவளத்தை வழங்கியும் குருடர்களுக்குப் பார்வை அருளியும் நடக்க முடியாத மாற்று திறனாளிகளை நடக்க வைத்தும் தீண்டாமை என்னும் தீண்ட சக்தியை ஒழித்துக் கண்டாலே தீட்டு என்னும் மரபை அழித்தும் திரு மண்ணை எடுத்து தம் பக்தர்களின் நெற்றியில் தொட்டு நாமம் இட்டார். காலை மாலை இருவேளையும் உகப்படிப்பையும், மதியம் உச்சிப்படிப்பையும் தம்மக்களுக்காக கொடுத்துதவினார். சமபந்தி போஜனம் நடத்தினார். சாதிக்கொரு கிணறு என்ற நிலையை மாற்றினார். சுவாமி தோப்பில் அய்யா வைகுண்டர் நிறுவிய கிணறு எந்தக் காலமானாலும் வற்றாமலே காணப்படுகிறது.

**அய்யா வழி ஆன்மீகக் கொள்கைகள்**

அய்யா வைகுண்டர் எந்தக் கோவிலுக்கும் சென்று வணங்கவில்லை. உடலுக்குள் தான் இறைவனை வணங்கினார். உருவ வழிபாடு கூடாது என்றும் ஆடு, கிடா, கோழி போன்றவற்றைப் பலியிட்டு வணங்குதல் கூடாது; மாமிசம் உண்ணக்கூடாது; சைவ உணவு அண்ணதானமாக ஏழை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றார் அய்யா வைகுண்டர். மக்கள் இளப்பாறிக் கொள்வதற்கு நிழல்தாங்கல் அமைத்து நிறுவ வேண்டும் என்றார் அய்யா.

**முடிவு ரை**

அய்யா வைகுண்டரைப் பொதுச்சமூகம் மாகாவிஷ்ணுவின் அவதாரமாகக் கருதப்படாவிட்டாலும், தமிழகத்தின் தென் மாவட்டங்களில் அய்யா வழியைத் தனிச் சமயமாக ஏற்று வழிபடுகின்றனர். ஒடுக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்ட அய்யாவழி மக்கள் சமூகப்பொருளாதார மேம்பாடு அடைந்து இன்று தனி அடையாளத்துடன் தங்களுடைய வாழ்வியல் விழுமியங்களை அமைத்துக் கொண்டனர். தமிழக முதல்வர் காமராசர்

Volume 1, Special Issue 1, January 2022 E-ISSN: 2583-0880

அச்சமூகத்தை மதிப்புமிக்கதாக மாற்றியிருந்தாலும், அக்காலத்திற்கு முன்பே அக்குல மக்கள் எல்லா நிலைகளிலும் சான்றோர்களாக விளங்கினர் என்பதை தெள்ளிதன் விளங்கும். சான்றோர் மக்களை அக மற்றும் புறதூய்மையை அளிக்கும் துவையல் தவசை மக்களுக்குப் போதித்தார். சைவ உணவுகளை மக்களுக்குப் புகுத்தி அசைவ உணவுகளை அடியோடு அழித்தார். தொடக்க காலங்களில் அய்யா வழியைப் பின்பற்றியவர்கள் பெரும்பாலும் நாடார் இனத்தவர்களாக இருந்த போதிலும், இன்று எல்லோரும் பின்பற்றும் தெய்வமாகக் காணப்பட வேண்டும். சாதியக் கட்டுப்பாடுகளை மறுதலித்தலின் வெளிப்பாடே அய்யா வைகுண்டர் வழிபாடு.

**பார்வை நூல்கள்**

[1] இரா. அரிகோபாலன் சீடர். அகிலத்திரட்டு அம்மானை. தென்தாமரைக்குளம், 1939.

[2] பா. சங்குமன்னன். அருள்நூல். சாமிதோப்பு, குமரி மாவட்டம் – 629704.

[3] நா. பால்வண்ணப் பெருமாள். பகவான் வைகுண்டர் அவதாரம். நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர், நாகர்கோவில், 2012.

[4] தி.பாலசுந்தரம். அகிலத்திரட்டு உரைநடை. சாமிதோப்பு, 2013.

[5] மாருதி ப்ரியன். அய்யா வைகுண்டர் அருளிய ஆன்மிக மார்க்கம். ஹேமா பப்ளிகேஷன், ஈத்தாமொழி, கன்னியாகுமரி மாவட்டம், 2013.

[6] எஸ்.வி.ராஜதுரை. தலித்தியமும் உலக முதலாளியமும். விடியல் பதிப்பகம், கோயம்புத்தூர், 2015.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.